**22.01.2026**

**MCOP.No.69/2023**
**ம.சா.5 : ரம்யா**
**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்வம் நடந்தது தேசிய நெடுஞ்சாலை பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற்றது. ஆம்னி பேருந்து மீது டிப்பர் லாரி மோதியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். மேற்படி விபத்து யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. நான் மேற்படி விபத்திற்கு இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள 1,25,00,000/- கோரி உள்ளதற்கு வருமான வரி ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சம்பள சான்று தாக்கல் செய்துள்ளேன். வருமான வரி (Return) தாக்கல் செய்யவில்லை.

2) எனது கணவர் பழனி ஆண்டி மருத்துவமனையில் ரத்த பரிசோதனை நிலையத்தில் வேலை பார்த்தார் என்றும் காய்கறி கடை வைத்திருந்தார் என்றும் தனியாக கல்பகனுரில் லேப் டெக்னீசியனில் இருந்தார் என்றும் அரிசி மண்டி வைத்திருந்தார் என்றும் விவசாயம் செய்தார் என்றும் சொல்லி உள்ளதில் என்ன வேலைதான் செய்தார் என்றால் லேப் மற்றும் காய் கறி கடை மற்றும் அரிசி கடை முதலியவற்றை ஆள் வைத்து தான் செய்தார். அவர் வேலை முடித்து விட்டு வந்து மற்ற கடைகளின் வியாபாரங்களை கவனித்து கொண்டார். மேற்கண்ட வேலைகள் எதுவும் என் கணவர் செய்யவில்லை என்று மனுவிற்காக நான் அவ்வாறு வேலை செய்ததாக நான் மிகைப்படுத்தி சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.47 முதல் 51, 56 முதல் 58 வரையுள்ள ஆவணங்கள் மனுவிற்காக இழப்பீடு கோருவதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) எவ்வாறு இவ்வளவு வருமானங்களை சம்பாதித்தார் என்று சொல்வதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேலும் வருமானத்தை காண்பிப்பதற்கான வருமான வரி கணக்கீடுகளை நான் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. இரவு நேரத்தில் எனது கணவர் தான் பஸ் நிறுத்தம் இல்லாத இடத்தில் வாகனத்தை நிறுத்தி லக்கேஜை ஏற்றி மேற்படி விபத்தை ஏற்படுத்துவதற்கு துணை புரிந்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே மேற்படி விபத்திற்கு முழு காரணமும் எனது கணவரின் தவறு தான் என்றால் சரியல்ல. பஸ் அந்த இடத்தில் நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டது. நான் இழப்பீடு கோரி உள்ள தொகை மிக அதிகமானது மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனவே 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

4) தர்ஷனா ரைஸ் ஸ்டோர் என்ற பெயரில் காய்கறி மற்றும் அரிசி கடைக்கு லைசென்ஸ் வாங்கியதாக சொல்லும் உரிமமானது 17.08.2021 வரை தான் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு உரிமம் புதுப்பிக்கப்பட்டதாக எந்த ஒரு ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புதுப்பிக்கப்ட்டிருக்க வேண்டும் இறந்துவிட்டதால் புதுப்பிக்கப்படவில்லை. எனது கணவர் 1 வருடம் 1 மாதம் கழித்து தான் இறந்தார், அந்த இடைப்பட்ட காலத்திற்கு லைசென்ஸ புதுப்பிக்கப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தர்ஷனா லேப் எனது கணவர் தான் நடத்தி வந்தார் என்பதற்கான உரிமம் சம்பந்தமான அவர் பெயரிலுள்ள ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் பழனி ஆண்டி மருத்துவமனையில் ரூ.17,500ம் சம்பளம் பெற்று வந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ள நிலையில் மிகுதி நேர பணி செய்து கூடுதலாக ரூ.5000/- சம்பளம் பெற்று வந்தார் என்பதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) பழனி ஆண்டி மருத்துவமனையில் போனஸ் ரூ.40000/- வாங்கியதற்கு நான் எந்த ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும் மருத்துவமனைக்கு செல்வதற்கு 1 மணி நேரம் வருவதற்கு 1 மணி நேரம் ஆகும்

என்றால் சரிதான். 1/2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் பார்த்து வந்தார் என்பதற்கான ஆதாரம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நிலம் எனது மாமனார் பெயரில் இருந்தது. அந்த நிலத்தில் இருந்து வந்த காய்கறிகளின் அடிப்படையில் தான் காய்கறி நடத்தி வந்தார். மேற்படி கடையை நானும் தான் நடத்தி வந்தேன். மேற்படி 1/2 ஏக்கர் நிலத்தில் தற்போதும் நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அவர் இறந்த பின்னிட்டு நான் விவசாயம் எதுவும் பார்க்கவில்லை. நிலம் அப்படியே தான் உள்ளது. எனது மாமனாரும் சமீபத்தில் இறந்துவிட்டார்.

6) மேற்படி நிலத்தில் நான் விவசாயம் பார்க்கவில்லை என்று மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் மாதம் ரூ.70000 சம்பாதித்தார் என்பதற்கான வருமான வரி கணக்கீடுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தின் லாரி ஓட்டுநரின் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றும் 1,2 எதிர்மனுதாரர்கள் மட்டுமே எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. பேருந்தின் ஓட்டுநர் இந்த விபத்திற்கு காரணம் இல்லை என்பதால் 3,4 எதிர்மனுதாரர்களை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.01.22 17:47:19 +0530

**Accidents Claim Tribunal, Attur.**